தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**


மரம் 14 பிப்ரவரி 2014 கனி 3



R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Feb. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை,
பொல்லாதவர்களுக்குக் கைகொடுக்கிறதுமில்லை
யோபு 8:20


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



தாராபுரம் சவுந்திர்ராஜ் மற்றும் சகோதர, சகோதரிகள்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழ்



**Associate Editor:**
**S.Reagan**



**Editor:**
**B.ARJUNAN**



**Associate Editor:**
**A.Kanagaraj**


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 162

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. எந்த தீர்க்கதரிசி பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான்?
2. எவனுடைய உபதேசத்தைக்கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்?
3. யோவாபின் ஆயுததாரிகளாகிய பத்துச் சேவகர் எவனைச் சூழ்ந்து அவனை அடித்துக்கொன்றுபோட்டார்கள்?
4. என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான், கண்டு களிகூர்ந்தான் என்று இயேசு எவனைக் குறித்துச் சொல்லுகிறார்?
5. சாலொமோனுக்குப் பயந்ததினால் எழுந்துபோய், பலீபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டவன் யார்?
6. கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, எதற்கு முன்பாக அடித்தார்கள்?
7. கர்த்தருடைய ஆலயத்திலே சேகரிக்கப்பட்ட பணத்தை எண்ணி முடிப்புக்கட்டி, எண்ணின பணத்தைக் கர்த்தருடைய ஆலயத்திலே எவருடைய கையிலே கொடுப்பார்கள்?
8. நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ எவைகளை உண்டாக்கினார்?
10. நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல என்று சொல்லும் அப்போஸ்தலன் யார்?

## ஏலீம் ELIM

- மாராவின் கசப்பான அனுபவத்திற்கு பின்பு இஸ்ரவேலின் 12 கோத்திரப்பிதாக்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் கிடைத்த ஆசீர்வாதம் ஏலீமின் 12 நீர் ஊற்றுகள் - யாத்.15:27
- மேலும் 70 பேரீச்சமரங்களும் ஏலீமில் இருந்தது மூன்று நாட்கள் தண்ணீர் இல்லாமல் வனாந்தரத்தில் வந்த ஆத்துமாக்களுக்கு தேவன் ஆயத்தப்படுத்திய மரங்கள் - எண்.33:9
- தென்கிழக்கு சூயஸ் பகுதியில் 100 கி.மீ க்கு அதிகமான பாலைவனப் பகுதியில் இந்த ஏலீம் அமைந்திருந்தது.
- பொதுவாக இது மாராவுக்கும் சீன் வனாந்தரத்திற்கும் இடையே அமைந்திருந்தாக விவரிக்கப்படுகிறது- யாத்.15:23; 16:1
- இஸ்ரவேலின் வனாந்தர பயணத்தின்போது பாளயமிறங்கிய இடங்களில் இதுவும் ஒன்று.



சிறுவர் பகுதி

# கெர்ச்சிக்கிற சிங்கம்போல்...

வேத பகுதி: 1பேதுரு 5:8

## Like a roaring Lion

ADS.Sugumar



கிறிஸ்துவுக்குப் பிரியமான பிள்ளைகள் யாவருக்கும் மற்றும் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" வாசா்களுக்கும் வாழ்த்துக்கள்.

மேற்கண்ட தலைப்பில் பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலமாக நமக்கு தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள் என்று எச்சரிக்கை செய்துவிட்டு, பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று காத்திருக்கிறான். ஆகையால் கவனமாய் இருக்கும்படி கூறுகிறார்.

எனவே நாம் மிகவும் கவனமாயிருந்து தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து பிசாசின் தந்திரங்களுக்கு தப்பிக்கொள்ளும்படியாக கர்த்தருடைய வசனங்களை உற்றுநோக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. சிங்கங்கள் காட்டில் மற்ற விலங்குகளை வேட்டையாடுகிறது. அது எவ்விதமாக வேட்டையாடுகிறது என்பதை நீங்கள் டிஸ்கவரி சேனல் மூலமாக பார்க்கலாம். அந்த விதமாக நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கர்த்தருடைய பிள்ளைகளில் எவனை விழுங்கலாம் என்று ஒவ்வொரு நாளும் சுற்றிச் சுற்றி வருகிறான். நம்மை வஞ்சிக்கும்படியாகவும், தந்திரமாகவும் வருவான். ஆகையால் ஒவ்வொருநாளும் நாம் தேவனுடைய ஆலோசனைகளின்படியும், கர்த்தருடைய ஊழியக்காரார்களுடைய வழிநடத்துதலின்படியும் நாம் வாழவேண்டியவர்களாயிருக்கிறோம். இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் மந்தையைவிட்டு வெளியே செல்லும் ஒரு ஆட்டைப்போல வெளியே போவோமானால் என்ன நேரிடும். சிங்கம் அந்த ஆட்டை அடித்து கொன்றுபோடும். அதைப்போல கர்த்தருடைய சபையை விட்டு வெளியே போகும்போதும், ஊழியர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போதும், வேதத்தை புறம்பாக்கிப்போட்டு, தன் இஷ்டப்படி நடக்கும்போது சிங்கம் வாயில் அகப்பட்ட ஆட்டைப்போல நாமும் பிசாசினால் விழுங்கப்படுவோம்.

கர்த்தர் தம்முடைய மந்தையாகிய சபையை அவர் நேசிக்கிறார். அதற்காக இரத்தம் சிந்தினார். அதை பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்வரை அதை பாதுகாத்து, பராமரித்து, போஷித்து காக்கிறார். இயேசு சொல்கிறார்: "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக்கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" என்றார் (யோவான் 10:11-15). இந்த நல்ல மேய்ப்பனாகிய ஆண்டவர் இயேசு உங்களுக்காக ஜீவனைக்கொடுத்தவர். அவர் உங்களை பிசாசின் கெர்ச்சிப்புக்கும், அவனுடைய பயமுறுத்தலுக்கும் விலக்கிக் காப்பாராக!

"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்கிறது" யோவான் 10:27





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 14 பிப்ரவரி-2014 கனி - 3


ஆசிரியருரை

## மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக்கொடுப்பான்?
### What Will A Man Give In Exchange for His Soul?



உலகத்திலே மனுஷன் பிறக்கிறான் பின்பு மரிக்கிறான். அவனால் அந்த ஜீவனை இரட்சிக்க முடியவில்லை. ஏனெனில்; அது மனுஷனால் கூடாதது. அந்த ஜீவனை உண்டாக்கின தேவனுக்கு மட்டுமே அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகையால் மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஒரு பொருளை வாங்கும்போது பணமோ, பொருளோ கொடுத்து வாங்குகிறோம். அதைப்போல தன் ஜீவனுக்காக என்னத்தைக் கொடுக்கமுடியும். ஒன்றையும் கொடுக்கமுடியாது. ஆனால் பரிசுத்த வேதாகமம் அதற்கான வழியை போதிக்கிறது. முதலாவது "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற்.8:35-37). எவன் ஒருவன் தன் உயிரை காக்க நினைக்கிறானோ, அவன் தன் உயிரை இழந்துபோவான். இதுவரை உலகத்தில் அதிக நாட்கள் உயிரோடு இருக்கவேண்டும் என்று தன் உயிரை காக்க நினைத்த ஏராளமானோர் இதில் தோல்வியடைந்துள்ளார்கள். மனுஷனுடைய நாட்கள் மிகவும் குறுகினதாயிருக்கிறது. 969 வருடம் உயிரோடிருந்த மெத்தூசலாவை குறித்து வேதாகமம் போதிக்கிறது. அவனே அதிக வருடம் உயிரோடிருந்தவன். அவனும் அதற்குப்பின்பு மரித்தான் என வேதத்தில் படிக்கிறோம். இந்த ஜீவனை அதாவது உயிரை காக்க நினைக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் அதை இழந்துபோவார்கள்.

ஆண்டவர் இயேசு கூறும் ஒரு உவமையிலே ஒரு ஐசுவரியவானைப் பற்றி படிக்கிறோம். அவன் தன் ஜீவனை காக்க; "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே

சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்'' (லூக்.12:19,20). தனக்காகவே சேர்த்துவைத் தவனுடைய நிலைமையைப் பார்த்தீர்களா! நான் எதற்காக இவ்வளவு சேர்த்துவைக்கிறேன் என்று கடுகளவும் சிந்திக்காமல் தன் ஆத்துமாவை நேசித்து சேர்த்தான். ஆனால் அவனால் அவனுடைய ஆத்துமாவை தப்புவிக்க முடியவில்லை. அவனுடைய கனவு எல்லாம் மாயையாக போய்விட்டது. அதைப்போல சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவன் தன்னுடைய ஜீவனை இரட்சிக்க விரும்பி; ''நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்'' (லூக்.23:39). மற்ற கள்வனுக்கு கிடைத்த பாக்கியம் இவனுக்குக் கிடைக்கவில்லை. எவன் ஒருவன் தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறானோ அவன் அதை இழந்துபோவான். அப்படியானால் நம் ஜீவனை இரட்சிக்க நாம் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

அந்த வசனத்தின் பிற்பகுதியில் வாசிக்கிறோம். ''என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்'' என்றார். ஆண்டவர் நிமித்தமாக ஜீவனை இழக்கும்போது அதை திரும்பவும் பெற்றுக்கொள்வோம். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! ஆம், சுவிசேஷத்தினிமித்தமாக தங்களுடைய ஜீவனை இழந்தவர்கள் அதை அடைந்தார்கள். ஸ்தேவான் என்ற தேவமனுஷனை கல்லால் அடித்துக்கொன்று போட்டார்கள். அவனோ ''அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்'' (அப்.7:56). என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று ஆண்டவர் இயேசு சொன்ன வசனத்தை இங்கே நினைவுகூருங்கள். மேலும், ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள்: ''என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மாற்.10:29,30). ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையை நம்பி தன் தேசத்தையும், இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு விட்ட ஆபிரகாமை தேவன் கைவிட்டரா? கடல்கரைமணலத்தனையான பிள்ளைகளையும், தேசத்தையும் சுதந்தரித்துக்கொண்டான். அன்று ஆபிரகாமை ஆசீர்வதித்த கர்த்தர் இன்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மையும் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். அவருடைய வார்த்தையின்படி ஆண்டவர்



சேர்த்துக்கொள்கிறார். இந்த ஆண்டில் நாம் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களில் ஈடுபடாமல் மனந்திரும்பி தேவனுக்கு பிரியமாய் நடப்போம்.

பிரியமானவர்களே; 1பேது2:21-ல் ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். புதிய ஏற்பாட்டின் வசனங்களை கொண்டு நாம் எப்படி வாழவேண்டும் என்று அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி வசனங்களை மாதிரியாக வைத்திருக்கிறார். ஆகவே நாம் இயேசு கிறிஸ்து நமக்கு வைத்திருக்கிற முன்மாதிரியை பின்பற்றுவது தேவனுக்குப் பிரியமானது. அதையே நாமும் செய்வோம்.

**எபிரெயர் 10:25-ல் வாசிக்கும்போது;**

ஒவ்வொரு வாரமும் சபைக்கூடிவருகிறதிலும் தேவன் பிரியப்படுகிறார்; எனவே நாம் சபையாகக்கூடிவருதலை விட்டுவிடாமல் தேவனுக்கு பிரியமாய் நடப்போம். அப்.20:7-ல் வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய பந்தியில் தவறாமல் பங்கேற்பது தேவனுக்குப் பிரியமானது, மாதம் ஒரு முறை அல்லது மற்ற நாட்களில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது தேவனுக்குப் பிரியமானது அல்ல. ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வது தேவனுக்குப் பிரியமானது அதை நாம் செய்வோம்.

2கொரி.9:7-ல் உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார். கொடுக்க வேண்டிய விஷயத்தில் நாம் மிகவும் தேவனை வஞ்சிக்கின்றோம். மல்கியா 3:8-ல் மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? என்று வாசிக்கின்றோம். நாம் தேவனை வஞ்சிக்கிறவர்களாய் இல்லாமல் சபை வளர்ச்சிக்கு, சபை ஊழியங்களுக்கும், சபை ஊழியர்களுக்கும் நாம் அதிகமாய் கர்த்தருக்குள் கொடுக்கிறவர்களாயிருக்கவேண்டும். 2கொரி.8:1,2-ல் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினால் சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரம் ஆகிய இம்மூன்றும் இருந்தும் அந்த சபையார் உற்சாகமாய் சபைகளுக்கு கொடுக்கிறவர்களாய் இருந்தார்கள். இதுவே தேவனுக்குப்பிரியம். அவர்கள் மேல் தேவன் பிரியமாய் இருந்தார். பிரியமானவர்களே; தேவனுக்குப் பிரியமானது எது என்பதை வேதம் நமக்கு நன்றாய் போதித்துள்ளது அதையே செய்வோம். கடைசியாக சங்.37:23-ல் தேவன் மனிதனின் வழியின் மேல் பிரியமாயிருக்கிறார்; ஆகையால் நல்ல மனிதர்களாக வாழ்ந்து தேவனுக்குப் பிரியமாய் இருப்போம். நம்முடைய ஆயுள் முழுவதும் தேவனுக்குப் பிரியமாய் வாழ உங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். ஆமென்


**மருத்துவ ஆலோசனை**

மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் (நீதி.17:22)
தேனைக் கண்டுபிடித்தாயானால்
மட்டாய்ச் சாப்பிடு;
மிதமிஞ்சிச் சாப்பிட்டால்
வாந்திபண்ணுவாய். (நீதி.25:16)



# தேவனுக்குப் பிரியமானது
# Pleasing To God

S.I.Reagan
Associate Editor



இந்தப் புதிய ஆண்டில் மறுபடியும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி. உங்கள் யாவருக்கும் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதம் விசேஷித்தவர்கள் என்ற தலைப்பில் உங்களை சந்தித்த நான் இந்த மாதத்தில் தேவனுக்கு பிரியமானது எது? என்ற தலைப்பில் உங்களை சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம் விசேஷித்தவர்களான நாம் தேவனுக்குப்பிரியமானது எது என்பதை அறிந்து அதை செய்வோம். உலகத்தில் உள்ள நாம் நமக்கு நாமே அல்லது ஒருவருக்கொருவர் பிரியமானது எது என்பதை அறிந்து அதை பூர்த்தி செய்துகொள்கிறோம். ஆனால் நம்மை சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கிற நம் தேவனுக்கு எது பிரியமானது என்பதை அறிந்தும் அதை செய்யாமல் போவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நாம் உணர வேண்டியது அவசியமாயிருக்கிறது.

பிரியமானவர்களே நாம் இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்து நம் தேவனுக்கு எது பிரியமோ அதை செய்ய நம்மை நாம் ஒப்புக்கொடுப்போம் சங்கீதம் 143:10-ல் தாவீது இப்படி சொல்கிறார்; "உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும் ஆனால் இன்றும் நமக்கு பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் உள்ள வசனங்கள் நாம் எப்படி தேவனுக்கு பிரியமாக வாழமுடியும் என்று அருமையாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டும் போதிக்கப்பட்டும் இருக்கிறது.

மத்.18:3-ல் "நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்று வாசிக்கின்றோம். இந்த புதிய ஆண்டின் துவக்கத்தில் உள்ள நாம் நம்முடைய தேவனுக்கு விரோதமாக உள்ள எல்லாவற்றிலுமிருந்து நாம் மனந்திரும்பி தேவனுக்கு பிரியமாய் வாழவேண்டும். ஒரு பாவி கிறிஸ்துவுக்குள் மனதிரும்புதல் தேவனுக்கு பிரியமானதாக உள்ளது. உண்மையாய் மனந்திரும்பும் யாவரையும், தேவன் தம்மிடம் சேர்த்துகொள்கிறார். உதாரணமாக அப்.2:37,38 வசனங்களை வாசிக்கும்போது அப்போஸ்தலனாகிய பேதுரு மனந்திரும்புதலுக்குரிய செய்தியை போதிக்கும்போது இந்த செய்தியை கேட்ட அவர்கள் சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள், அதற்கு பேதுரு: நீங்கள் மனந்திரும்புங்கள் என்று ஒரு வார்த்தையை சொல்கிறதை வாசிக்கிறோம். ஆகவே மனந்திரும்புதல் தேவனுக்கு பிரியமானது அதை அவர்கள் செய்தார்கள். இப்படி மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட மூவாயிரம்பேரையும் கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார் அப்.2:47. அவருடைய சபையில் அதாவது அப்.20:28-ல் கிறிஸ்து தன் சொந்த இரத்தத்தை சிந்தி வாங்கின கிறிஸ்துவின் சபையில் நம்மைச்



நிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் ஜீவனை இழக்கும்போது அதை இரட்சித்துக்கொள்வோம். ஏனெனில் நம்முடைய தேவன் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற தேவன். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். நீங்கள் சோர்ந்துபோகாமல் புதியஏற்பாட்டு கிறிஸ்தவர்களை நோக்கிப்பாருங்கள். அவர்களுடைய சரித்திரத்தை அப்போஸ்தல நடபடிகளில் படியுங்கள்.

இந்த ஜீவனுக்கு ஈடாக மனுஷன் என்னத்தைக் கொடுப்பான். பழையஏற்பாட்டில் ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று படிக்கிறோம். பழைய பிரமாணம் ஜீவனுக்கு ஈடாக அந்த ஜீவனை கொடுக்கவில்லை மாறாக அந்த ஜீவனை எடுத்தது. ஆகையால் அது நீக்கப்பட்டது. ஆனால் இயேசுவோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கும்படி வந்தேன் என்கிறார். “திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்” (யோவா.10:10,11). இந்த வசனத்தின்படி இயேசுவானவர் தன் ஜீவனை கொடுத்து ஜீவன்களை இரட்சிக்கிறார். ஒரு மனுஷனுடைய ஜீவனை இரட்சிப்பதற்கு ஈடாக இயேசுவின் இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய நற்செயல்கள் மூலமாக அல்ல. நம்முடைய புண்ணியத்தினாலும் அல்ல. பலர் நினைக்கின்றனர். தானதர்மங்கள் செய்தால் போதும் நம்முடைய பாவகருமங்கள் எல்லாம் மாறிவிடும். நம்முடைய ஆத்துமா காப்பாற்றப்படும் என்று. நாம் நம்முடைய பாவங்களை கழுவமுடியாது. எந்தவிதமான தானதருமங்களு நம்முடைய பாவத்தை கழுவாது. நாம் நம்முடைய அன்றாட அழுக்குகளை கழுவுவதுபோல பாவத்தை கழுவிவிடலாம் என நினைக்கின்றனர். உள்ளத்தின் பாவகறையை கழுவ இயேசுவின் இரத்தம் தேவை. அந்த இரத்தமே பரிசுத்த இரத்தம். ஆடு, மாடு, கோழி இவைகளின் இரத்தம் பாவங்களை கழுவாது. அதன் மீது நம்பிக்கை வைக்கிறவர்கள் பின்நாளிலே ஏமாற்றம் அடைவார்கள். ஆடு மாடு கோழிகளை மனிதன் தன்னுடைய உணவுக்காக அன்றாடம் பயன்படுத்துகிறான். அந்த ஆடு மாடு கோழி எப்படி ஒரு மனுஷனுடைய ஜீவனை காப்பாற்றும், சிந்திக்கவேண்டுகிறோன். மனுஷனுடைய போதனைகளை தள்ளிவிட்டு தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுங்கள்.

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானதல்ல;” என்கிறார் பவுல் (எபே.2:7,8). ஒரு மனிதன் ஒரு காரியத்தை தான் செய்துவிட்டால் பெருமை கொள்வான். அது அவனுடைய இயல்பாக இருக்கிறது. நாம் நம்முடைய ஜீவனை காப்பது நம்முடைய கிரியைகளினால் அல்ல. அது தேவனுடைய ஈவாக இருக்கிறது. பிதாவாகிய தேவன் நம்மை இரட்சிக்கும்படியாக; “ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவா.3:16).

நம்முடைய பிள்ளைகளுக்கு இவ்வசனத்தை மனப்பாட வசனமாக சொல்லிக்கொடுக்கிறோம். அனைத்து திருச்சபைகளிலும் இதை பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கின்றார்கள். ஆம், தேவன் நம்மீது அன்பு கொண்டு தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அது அவருடைய தயவாக இருக்கிறது. இந்த ஜீவனை உங்களுக்காகவும் எனக்காகவும் ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசுவுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம். ஆண்டவர் நாமத்திற்காக பாடுபடுவோம். அவருடைய சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்து சொல்லுவோம். சுவிசேஷத்தை எடுத்துச்சொல்லும் திருச்சபையோடு சேர்ந்து ஒத்துழைப்போம். இதுவே நீங்கள் உங்கள் ஜீவனை ஆதாயப்படுத்திக்கொள்ள வழியாக அமையும். அவர் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகர்களே மரித்தோரை எழுப்பும் கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். உங்களுடைய ஜீவனை இரட்சிக்க உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது உங்களுடைய ஜீவன் காக்கப்படும்.

**தேவன் மனுஷனுக்கு செய்த காரியங்கள் எத்தனை?**

இதை நாம் எண்ணிக்கையில் சொல்லிவிட முடியாது. எழுத்தால் எழுதிவிடவும் முடியாது, சொல்லால் சொல்லிவிடவும் முடியாது. அத்தனை நன்மைகளை நமக்குச் செய்திருக்கிறார். ஆகையால் பவுல் எழுதும்போது; “தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்” என்றார் (2கொ.9:15). சொல்லிமுடியாத ஈவு என காண்கிறோம். ஒரு மனுஷனுக்கு வியாதி வந்துவிட்டால், பல விதமான பிரச்சனைகள் இருப்பதாக டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். அது உண்மையாகவே இருக்கிறது. சரீரத்தில் உள்ள ஒரு உருப்பு செயல் இழந்துவிட்டால் அதை சரி செய்வது எவ்வளவு கடினமாகிவிடுகிறது. அப்பொழுதுதான் நாம் நினைக்கிறோம் தேவனுடைய ஈவுகளை நினைத்து. மரணம் வரை இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரத்தை மாம்சத்தில் உருவாக்கியிருக்கிறார். இரும்பினால் செய்த இயந்திரங்கள் தேய்ந்துபோய் பழுதாகி நின்றுவிடுகிறது. பிறந்ததுமுதல் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப மாம்சத்தில் வளர்ச்சியடையக்கூடிய இயந்திரத்தை நம் இருதயத்தில் பதித்துள்ளார் எத்தனை ஆச்சரியமான காரியம். தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்கு அவருக்கு ஸ்தோத்திரம். மேலும், “தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?” (ரோம.8:32). தேவன் எவ்வளவு நல்லவர் என்று பார்த்தீர்களா! அவர் மனுஷனுக்கு செய்த காரியங்களை நினைத்தால் நாள்போவது தெரியாது. அவருடைய மகிமை அற்புதமானது. அதைக்குறித்து பேசுங்கள் அதைக்குறித்து தியானியுங்கள். எங்களோடு கடிதத்தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.



2.சத்தியம் இருக்கிறது. ஒரு முறை இயேசு ஜெபித்தார். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17).

ஆ) அது நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்கக்கூடியதாக இருக்கிறது.

1. தேவ வசனமில்லாமல் இரட்சிப்பில்லை

2. உம்மிடத்தில் நித்திய ஜீவ வார்த்தைகள் உண்டே என்று பேதுரு ஒரு முறை இயேசுவைப் பார்த்து சொன்னார் (யோவான் 6:68).

இ) இது பரிபூரணமான சுயாதீனப்பிரமாணம்.

1.பரிபூரணம் (நிறைவானது) ஆத்தும இரட்சிப்பாகிய நோக்கத்தை நிறைவேற்ற போதுமானது.

2. இது ஒரு விதி ஏனென்றால் இது ஒரு ஒழுக்க நடைமுறைக்கான சட்டம் (நிலைப்பாடு)

3. இது சுயாதீனப் பிரமாணம் ஏனென்றால் மனிதர்களை பாவத்தின் அடிமைத்தனத்தினின்று இது விடுதலை செய்கிறது இது ஒரு முரண்பாடு. இயற்கையாகவே சட்டம் கட்டுப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. சட்டம் எங்கேயிருக்கிறதோ அங்கேதான் உண்மையான சுதந்திரமும் இருக்க முடியும். கட்டுப்பாடு இல்லாத நிலை மிகவும் மோசமான நம்பிக்கையற்ற அடிமைத்தனத்தில் கொண்டுபோய் விடும்.

4. இந்த வார்த்தை அப்படியே ஒட்டுப்போடப்படாமல் (மனதில்) நன்கு பதிய வைக்கப்படவேண்டும்.

1.பதியவைக்கப்படுதல் என்றால் அது கிறிஸ்தவனில் நிரந்தரமாக பிரிக்கமுடியாத பகுதியாகிவிடும்.

2. மாதிரியாக மிருகங்களின் நடைமுறைகளை கவனிக்கும்படி அவைகளில் பொருத்தப்படுகிற கருவி குறிப்பிட்ட வருடங்களுக்கு அதைத் தெரிந்து கொள்ள உதவும்.

3. நமக்குள் தேவ வார்த்தை தங்கியிருந்து நமக்கு கட்டளையிடவும் வழி நடத்தவும் செய்கிறது. ஏதோ நமக்கு ஒத்துவரும்படி அவ்வப்பொழுது எடுத்துக் கொள்ளவும் விட்டுவிடவும் கூடியதல்ல.

4. ...நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி.... (எரே.31:33).


அ) நாம் தேவ வார்த்தைக்கு செவி சாய்க்க வேண்டும் (1:22) செயல்படுத்தப்படும்வரை வார்த்தை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகாது.

ஆ). சிலர் ஒரு வார வாழ்க்கையை 30 நிமிடம் கேட்பதற்கு ஈடாக்க விரும்புகின்றனர். தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியும்வரை உண்மையாகவே அது பெற்றுக்கொள்ளப்பட்டதாயிருக்காது.

1. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால். இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

2.அநேக சமயங்களில் மக்கள் கவனித்துக் கேட்கின்றனர் ஆனால் செயல்படத் தவறிவிடுகின்றனர். நான் வருகையைப் பற்றி பிரசங்கம் செய்தேன், மக்கள் அதை விமர்சித்தார்கள். ஆனால் அதற்குப்பின் தவறாமல் வரத் தவறிவிட்டார்கள்.

3. ஜான் கால்வின் அவர்கள் பின்வருமாறு சொன்னார். "கீழ்ப்படிதல் என்பது தேவனைப்பற்றிய அறிவின் உண்மையான அறிவு" **-தொடரும்**




## துவாலையின் பாடம் -5 Lessons of the Towel

*- Jerry Bates*

**பலமான விசுவாசத்தை வளர்த்தல் - யாக்கோபு 1:19-27**
**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. இந்த பகுதி தேவனுடைய வார்த்தையைக் குறித்து நம்முடைய மனப்பான்மை என்ன என்பதைப் பற்றியது.

2. 18-ம் வசனம் நாமெல்லாம் சத்தியத்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டோம் என்று குறிப்பிடுகிறது. இதுவே புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் சொல்லப்படுகிற புதிய பிறப்பு.

3. இது சுவிசேஷமாகிய கருவியின் மூலமே நிறைவேற்றப்படுகிறது. நாமெல்லாரும் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார் (1பேது.1:23).

4. இந்த புதிய வாழ்க்கையில் சம்பந்தப்பட்டிருப்பது என்ன? ஒரு வாழ்க்கை மாற்றம். அ) தேவனுடைய சுய சித்தத்தினால் இது கொடுக்கப்பட்டது. நமக்கு இரட்சிப்பை அருளும்படி தேவனுக்கு எந்த கடனும் கிடையாது.

ஆ) ஒரு வகையில் நாமெல்லாரும் முதற்பலனாயிருக்கும்படி ஜெநிப்பிக்கப்பட்டோம். விளைச்சலில் முதன்மையான பகுதியே பழைய ஏற்பாட்டில் முதற்பலனாயிருந்தது மற்ற விளைச்சளெல்லாம் சாதாரண பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படு முன்பு இது தேவனுக்குரியதாயிருந்தது. இஸ்ரயேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும், அவருடைய விளைவின் முதற் பலனுமாயிருந்தது (எரே.2:3).

இ) நாம் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டியவர்கள் என்ற வகையில் நாமும் முதற்பலனானவர்களே.

5. நாம் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் தேவனுடைய வார்த்தையின்பால் நமக்கிருக்க வேண்டிய மனப்பான்மை என்ன?

I. தேவவார்த்தையால் நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் நாம் தேவ வார்த்தையை பெற்றுக்கொள்ள வேண்டும் (1:23).

1. இதை ஆவலோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

அ) பெற்றுக்கொள், ஏற்றுக்கொள் என்ற வார்த்தைகள் கிரேக்க மொழியில் வரவேற்பைக் குறிக்கின்ற உபசரிப்பு தொடர்பான வார்த்தை. ஆ) கேட்கிறதற்குத் தீவிரமாயிருங்கள். 1. தபாலில் நாம் ரசீதுகளைப் பெறுகிறோம் ஆனால் அவைகள் வரவேற்பதில்லை. 2. தேவ வார்த்தையை நாம் வரவேற்க வேண்டும். உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுதும் அது என் தியானம் (சங்.119:97).

II. கடுங் கோபத்தோடு ஏற்றுக் கொள்வதற்கு மாறாக. சாந்தத்தோடு அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏற்றுக்கொள்ளும் மற்றும் ஒப்புக்கொடுக்கும் மனப்பாண்மையோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

III. ஏன் தேவ வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அ)இந்த வார்த்தை சத்தியத்தின் வார்த்தை

1. நாம் விளம்பரம் மற்றும் தவறாக பிரதிபலித்தலிலுள்ள காலத்தில் வாழ்கிறோம். சில பொருட்கள் எதற்குப் பயன்படும் என்பதை தவறாகக் குறிப்பிட்டதற்காக நிறுவனங்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. தர்மஸ்தாபனங்கள் மற்றும் மத சம்பந்தப்பட்ட அமைப்புகளும் கூட குற்றமுள்ளவைகளாக இருக்கின்றன. நாம் எதை நம்ப வேண்டுமென்பதை நினைத்து ஆச்சரியப்படுகிறோம்.





## ஆலயம் - Temble

A.Kanakaraj
Associate Editor

"தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" வசன மாத இதழ் வாசகர் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள் பல!

நாம் உலகமெங்கிலும் சுற்றி வந்தோமானால் அநேக ஆலயங்களை பார்க்கலாம். அது முகத்தோற்றத்திற்கு அழகிய வேலைப்பாடு கொண்டதாக காணப்படும். வானலாவிய கோபுரங்களை பார்க்கலாம்.

முற்காலத்தில் சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தை கட்டத்தொடங்கினான். எருசலேமில் உள்ள தேவலாயம் 60 முழம் நீளம், 20 முழ அகலம் 30 முழ உயரமும் கொண்டதாக இருந்தது (1இரா.6:2-11). இந்த ஆலயம் கட்டி முடிக்க 40 ஆண்டுகள் ஆனது. ஆனால் தேவன் கையால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் செய்வது இல்லை (அப்.17:24).

நாம் வாழும் இந்த சரீரத்தை தேவனால் பெற்றோம். நாம் தேவனுக்கு சொந்தமானவர்கள். ஆகையால் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். இந்த தேவன் நம்மில் வாசம்பண்ணுகிறார். நாமே தேவனுடைய ஆலயம். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறிவீர்களா? என்று பவுல் 1கொரி.6:19-ல் தெரியப்படுத்துகிறார். நாம் தேவனுடைய ஆலயமாக இருப்பதால் இதை பாதுகாக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். புகையிலை, பாக்கு, ஹெராயீன், மது போன்ற பழக்கத்தினால் தேவன் தங்கும் இந்த ஆலயத்தை கெடுத்துப்போட்டு விடக்கூடாது. இப்படி நீங்கள் தேவனுடைய ஆலயத்தை கெடுத்துப்போடுவதால் தேவனுக்கு நீங்கள் விரோதிகளாயிருப்பீர்கள். உங்களை யாரும் நம்பமாட்டார்கள். உங்களுக்கு பெண்கொடுக்கவும் உங்கள் வீட்டில் பெண் எடுக்கவும் விரும்பமாட்டார்கள். எனவே, உங்களை பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். தேவன் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லை எனக்காண்கிறோம்.

காலம் மாறலாம், கனிவான கவனிப்பு மாறலாம் ஆனால் ஆண்டவர் வார்த்தை மாறாது அவர் நேற்றும் இன்றும் என்று மாறாதவர். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம் (1கொரி.3:16,17). அநேகர் நம்முடைய சரீரமாகிய உடல் நம்முடையது ஆகையால் நாம் மனம்போன போக்கிலே வாழலாம் என நினைக்கின்றனர். இந்த உடல் தேவனுடையது ஆனால் மண்ணுக்கு சொந்தமானது. ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு செல்லும். ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய, உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1கொரி.6:20).

# சபையின் அமைப்பு
## Organizatin of the Church

*J.C.Choate*



சபையானது அழைக்கப்பட்டவர்களாலும், இரட்சிக்கப் பட்டவர்களாலும், உலக வழிகளை விட்டு விட தீர்மானித்திருக்கிறவர்களாலும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறவர்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இது தன் நோக்கத்தில் சர்வதேச அளவிலும், உலக அளவிலும் அமைந்துள்ளது. கிறிஸ்து தம்முடைய சபையை தாம் கட்டப்போவதாகக் கூறினார் (மத்.16:18). மேலும் சபை உலகத்தில் எவ்விடத்திலும்,எங்கும் இருக்கிறது. சபையார் கூட்ட அமைப்பல் உள்ளூரிலும் சபை இருக்கிறது. வேதாகமம் கொரிந்து, தெசலோனிக்கேய, கொலோசெய போன்ற பல பட்டணங்களில் கூடிவந்த சபையைக் குறித்து பேசுகிறது (1கொரி.1:1,2; 1தெச.1:1,2; கொலோ.1). ஒருவர் உள்ளூர் சபை அங்கத்தினராக இருக்கலாம் ஆனால் அவர் உலகம் முழுவதும் எங்குசென்றாலும் அவர் உலகளாவிய சபையின் அங்கத்தினராகவுமிருக்கிறார்.

சபை தனிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது தேவன் ஏற்படுத்தின நோக்கத்திற்காக ஊழியஞ்செய்யக்கூடியதாயிருந்தால் இது பணிசெய்யும் ஒரு அமைப்பிற்குள்ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். இதன் தலைவர் கிறிஸ்துவே, அவர் இந்த அதிகாரத்தை எந்த ஒரு மனிதனோடும் பங்கிட்டுக் கொள்ளுகிறதில்லை. பவுல் கிறிஸ்துவைக் குறித்து, “அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்”(கொலோ1:18)எனக் கூறினார். பவுல் மேலும் எபேசு சபைக்கு, “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”(எபே.1:22,23)எனக் கூறுகிறார்.

சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து பரலோகத்திலே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவரே சபையின் தலைவராக இருக்கிறார். சபை ஏதாவது “தலைமை ஸ்தாபனங்களை”பெற்றிருக்குமானால் பிறகு நாம் இது தமது தலைவர் இருக்கிறதான பரலோகத்தில் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்திருப்போம். “நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்” (கொலோ.3:1)என வாசிக்கிறோம். எபிரெயர்1:3-ம் இதையே போதிக்கிறது. ஆனால் உலக அளவில் சபையைக்குறித்த காரியம் என்ன? கிறிஸ்து தலையாயிருப்பதைத் தவிர உலகளாவிய அமைப்பினை சபை பெற்றிருக்க வில்லை. உள்ளூரில் சபை அங்கத்தினர்கள் சபைக்குள் குழுவாக இருக்கின்றனர், மேலும் ஒவ்வொரு சபையும்



செய்தி , இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி. பாருங்கள் ,இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப்போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம் மை வாட்டாது.“அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்மே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல” என யோவான் 4:18 -ல் மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சியமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள். இவ்வாண்டிலிருந்தாவது நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி,ஜீவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் “ நீ பயப்படாதே, நான் உன்னுடைனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் என்று ஏசா 41:10-ல் கர்த்தர் சொல்லுகிறார். நாம் கர்த்தருடையவர்களாயிருந்து வரும் புத்தாண்டில் கர்த்தரின் அசீர்வாதத்தை பெறுவோமாக!

## ஆன்மீக ஆலோசனை



**ஆலோசனையில்லாத இடத்தில்**
**ஜனங்கள் விழுந்துபோவார்கள் (நீதி.11:14)**
**நீதியையும் தயையும் பின்பற்றுகிறவன்**
**ஜீவனையும் நீதியையும் மகிமையையும்**
**கண்டடைவான். நீதி.21:21**

## வேதாகமம் உறுதிப்படுத்தப்படுதல்

புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மண்வெட்டியானது சத்தியத்திற்கும் வேதாகமத்திற்கும் ஒரு நண்பனாகவே இருக்கிறது. பாலஸ்தீனத்தில் பல ஆண்டுகளாக புதை பொருள்களைத்தோண்டும் பணியில் ஈடுபட்ட பிறகு, சின்சினாட்டியில் உள்ள எபிரெய யூனியன் செமினரியில் உள்ள பேராசிரியர் நெல்சன் குளுக் அவர்கள், தம்முடைய மற்றும் தம் சக பணியாளர்களுடைய கண்டுபிடிப்புகள் யாவும் வேதாகமத்தின் உண்மைகள் மற்றும் சத்தியங்களை உறுதிப்படுத்துகின்றன என்று எழுதினார்.

அவர் “வேதாகமத்தின் வரலாற்றுக்கூற்று எதற்கும் முரண்பட்ட அல்லது மறுக்கின்ற புதை பொருள் கண்டுபிடிப்பு என்பது ஒரு காலத்திலும் ஒன்று கூடக் கண்டறியப்பட்டதில்லை” என்று கூறினார்.

(Nelson Glneck, “New york Times Book Review”)

வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்ற போது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார்.அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது .வேதம் 'வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு ' என்று கூறுகிறது . ஆம், நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாமென கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரிகளே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா?, வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியானவருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம காணாணுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் ( லூக் 24 : 15). ஏன் தெரியுமா? மாம்சசிந்தையினால் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்சபிரகாரமாகவே எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர் அப்போஸ்தர்களைப் பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் பயப்படாதிருங்கள் – – எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ( லூக் 2:10) என்றான். ஆம் இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம் நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின்



சுயமாக செயல்படுகின்றது,மேலும் இது சுயாட்சி செய்கிறது. கிறிஸ்து உள்ளூர் சபையின் தலைவராக இருக்கின்றார், அவரே தம்முடைய புதிய ஏற்பாட்டு வார்த்தையின் அதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்கின்றார், சபையின் மனிதர் வேதவாக்கியங்களினால் வழிநடத்தப்படுகிறவர்களாக கிறிஸ்துவின் அதிகாரத்தை பூர்த்திசெய்யும் படிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்புடையவர்களாக யிருக்கிறார்கள். அவர்கள் போதிக்கின்றவர்களாகவும், உபதேசிக்கின்றவர் களாகவும், தரும காரியங்களையும் சபையின் சுவிசேஷப் பணியையும் திட்டமிடுகிறவர்களாகவுமிருக்க வேண்டும். மேலும் ஸ்திரீகள் மற்ற ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டியதும் அவசியம், ஸ்திரீகளால் பல்வேறு தரும காரியங்களையும் அந்நியரை உபசரிக்கும்பணிகளையும் மிகச்சிறப்பாக கையாள வேண்டியதும் அவசியம். மனிதரும் கூட சபைக்குரிய எந்த வேலையையும் செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்களாலும், ஆவியினாலும் வளர்கிறது போல, தகுதிவாய்ந்த முதிர்ச்சியடைந்த மனுஷர் மத்தியிலிருந்து மூப்பர்களும் உதவிக்காரர்களும், சபையின் 'மேய்ப்பர்கள்' மற்றும் 'ஊழியர்கள்' போல செயல்படுவதற்கு நியமிக்கப்படும் நிலையை சபை அடையவேண்டும். அங்கு இரண்டு அல்லது அதற்கு மேலான மூப்பர்களும், இரண்டு அல்லது அதற்கு மேலான உதவிக்காரர்களும் நியமிக்கப்பட்டு தங்களுடன் ஐக்கியமாகும் அங்கத்தினர்களால் அறிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இந்த மனுஷர் வேதவாக்கியங்களில் கோடிட்டு காட்டப்பட்ட குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் (1தீமோ.3; தீத்து1).

மூப்பர்கள் (பாஸ்டர்கள், பிஷப்கள், பிரஷ்பிடர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் கூட அழைக்கப்படுகின்றனர்) மந்தையை வழி நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்கள். உதவிக்காரர்களும் கூட பணிவிடைக்காரர்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் மேலும் அவர்கள் மூப்பர்களுக்கு சபை பணிகளில் உதவிக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வழக்கமாக சபைப்பொருட்கள் அல்லது சபையின் சரீரதேவைகளை கவனிக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

சபையில் மிக உயர்ந்த பணி உள்ளூர் சபையில் மூப்பர்களில் ஒருவராக ஊழியஞ்செய்வதேயாகும். கர்த்தர் சபையின் தனிப்பட்ட ஒரு ஆண் அங்கத்தினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளின் மேல் ஆளுகை செலுத்துபவராக ஊழியஞ்செய்ய சித்தங்கொள்ளவில்லை. ஆனபடியால், அவர் ஒரு சபையில் இருக்கும் மூப்பர்களில் ஒருவரை போலிருக்க ஒரு மூப்பரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். மூப்பராக இருக்கிறவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர் களோடு இணைந்து சபைப்பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் பவுல் பட்டியலிட்டிருக்கிற தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும்.அத்தோடுகூட

கர்த்தருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு மூப்பர்கள் தங்களுக்குள்ளேயும் உள்ளூர் சபை அங்கத்தினர்களோடும் கூட இணைந்து ஊழியஞ்செய்ய கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஆடுகளை மேய்ப்பது (அப். 20:28) அல்லது சபையின் ஆவிக்குரிய போஜனத்திற்கு கொடுத்துதவுவது மூப்பர்களுடைய வேலையாயிருக்கிறது. அவர்கள் கள்ள உபதேசத்திற்கு அவைகளை விலக்கிக் காத்து பக்தியற்றவர்களையும் அவிசுவாசமுள்ள சபை அங்கத்தினர்களையும் ஒழுங்குப்படுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

உள்ளூர் சபை போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் எல்லா அங்கத்தினர்களும் உண்மையாகவே கர்த்தருடைய ஊழியக்காரர்களாயிருப்பது அவசியம். ஆராதிக்கும்படிக்கு ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதினால் அங்கு ஒற்றுமையிருக்க வேண்டும். அவர்கள் இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுப்பதில் பிரசங்கியாகவுமிருக்க வேண்டும். சபையிலும் சமுதாயத்திலும் தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்வதில் இரக்கம் காட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களைக் கொண்ட ஒரு சபை வளர்ச்சியடைகிறதாகவும், ஆவிக்குரியதாகவும், பிரசங்கிக்கிறதாகவும், விசுவாசமிக்கதாகவுமிருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது சபை கிறிஸ்தவம் என்பது என்ன என்பதையும், சபை தம்முடைய அங்கத்தினர்களோடு ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருப்பதையும், ஆத்தும பாரம் கொண்டிருப்பதையும் இழந்துபோனதை இரட்சிக்கவும் ஒரு நல்மாதிரியைக் கொண்டிருப்பதையும் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து கனப்படுத்துகிறதையும் மெய்ப்பிக் கிறதாயிருக்கிறது. இது ஒழுங்குப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சபையாகும்.

## சபை செய்திகள் மற்றும் வாசகர் ஜெப குறிப்பு

✦ பாண்டிச்சேரி **சகோ. தங்கவேல்** ஊழியம் செய்யும் பகுதியில் ஊழியர் கூட்டம் கடந்த 14-ம் தேதி நடைபெற்றது தமிழகத்தில் உள்ள 10 மாவட்டங்களைச் சேர்ந்த சகோதரர்கள் பங்குபெற்றனர்.

✦ நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலம் **சகோ. பால்ராஜ்** ஊழியம் செய்யும் பகுதியில் சகோதரிகளுக்கான கூட்டம் நடைபெற்றது 30 சகோதரிகள் கலந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினர்.

✦ பெங்களூர் சபாஸ்டின் தாயார் மூச்சு சரியாக விடமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள் இவர்களுக்காக ஜெபியுங்கள்.

✦ திருச்சங்கோடு மனோகரனுடைய 7வருட வாதநோய் குணமாகவும், 27 வயதுடைய மகளுக்கு திருமணம் நடைபெறவும் ஜெபியுங்கள்.

✦ பெங்களூர்ஆல்பர்ட் ஆரோக்கியமேரி மகள் வயது 27 இதுவரை எத்தனையோ வரன்கள் வந்தும் எதுவும் அமையவில்லை ஜெபியுங்கள்.

✦ கோவை தேவராஜன் மகன் மற்றும் மகளுக்கு வேலை கிடைக்க ஜெபியுங்கள்



பெண்கள் பகுதி

# பயப்படாதே

## Fear Not

*- Glory Arjunan*



புதிய ஆண்டு எவ்வாறு இருக்குமோ? பழைய ஆண்டின் வருத்தங்களும், சஞ்சலங்களும் தொடருமோ என பயந்து, புதிய ஆண்டில் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதோ என ஏங்கிக் காத்திருக்கும் சகோதரிகளே பயப்படாதீர்கள்.

கத்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும், என்னையும் வழிநடத்துவது அதிகநிச்சயமல்லவா? ஆபிரகாம், கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன். அவனை அருமையாக நடத்தினதேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய், விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்தவல்லவர். புத்தாண்டுக்குள் நுழைந்திருக்கிற நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி,...நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரியபலனுமாயிருக்கிறேன் என்றார்(ஆதி.15:1). இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டுமல்ல,நற்கிரியையும்கூட. ஆம் ,ஆதி.14:22ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். “ ....நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்” என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே,ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்கும் எனயோசிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்க கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி,வேறுஎதுவாயிருந்தாலும் சரி .இச்சையை தவிர்க்கும் போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகாபெரியபெலனுமாயிருபார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி “...பயப்படாதே, நான் உன்னோடேகூடஇருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார் ”(ஆதி.26:24) . ஈசாக்கு இவ்வாசீர்வாத

ஒவ்வொன்றும் நுண்ணறிவும் வடிவமைப்பை கண்பிக்கிற போது, உண்மையாகவே இவைகளையெல்லாம் உருவாக்கிய பிரதானமான அதிகாரமிக்க நுண்ணறிவுள்ள வடிவமைப்பாளர் ஒருவர் ஆதியிலே இவற்றைத் துவங்குவதற்கு இது ஞானமான காரியமில்லையா? வியக்கத்தக்க வகையில் உருவாக்கப்பட்ட ஒரு வெளிப்படையானப் பொருளை நாம் காணும்போது தொடர்ந்து தானாகவும் மற்றும் அறிவியல் பூர்வமாகவும் நிறைவேறுகிறது என்பது உண்மையில்லையா?

சரீரப்பிரகாரமான கண்களின் பார்க்கும் திறன் போதுமான அளவில் இல்லாமல் எல்லாவற்றிற்கும் மேலான மாபெரிய குருட்டுத்தன்மை இருப்பதினால் வெறுமனே தேவன் இருக்கிறார் என்பதை மறுதலிக்கச் செய்கிறது.

## நடப்புச் செய்திகள்

- ஓடும் ரயில்களில் தீ விபத்து ஏற்படும் போது, ரயில் உடனடியாக நிற்கும் வகையிலான புதிய கருவியை பொருத்த, ரயில்வே வாரியம் திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவில் 2013-ல் 4 லட்சத்து 40 ஆயிரம் விபத்துக்கள் நடந்ததில், ஒரு லட்சத்து 39 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். தமிழகத்தில் மட்டும் 16,175 பேர் இறந்துள்ளனர். விபத்துக்களில் தமிழகம் முதலிடம்.
- பிரிட்டனில் செலவில்லா பிரசவம், குவியும் வெளிநாட்டு கர்ப்பிணிகள்.
- மைக்ரோசாப்ட் நிறுவனம் பில்கேட்ஸ், மீண்டும் உலகின் 'நம்பர் 1' என்ற சிறப்பை பெற்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவில் நடந்த பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ்போட்டியில் இறுதி ஆட்டத்தில் நம்பர் ஒன் வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் வெற்றிபெற்று கோப்பையை கைப்பற்றினார்.

### வேத அறிவுப்போட்டி: 161 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பிலேயாம் | - எண்.22:41 |
| 2. யோவான் | - 2யோ.1,2 |
| 3. மோசே | - உபா.4:19 |
| 4. யோவான் | - 3யோ.1 |
| 5. நேபோ | - உபா.32:49 |
| 6. கடிந்துகொண்டு | - வெளி.3:19 |
| 7. யோசுவா | - யோசு.8:28 |
| 8. இரண்டு | - மத்.26:60 |
| 9. திம்னாத் ஏரேசில் | - நியா.2:9 |
| 10. அக்கினியினால் | - மாற்.9:49 |

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை - சங்கீதம் 119:165**

### வேத அறிவுப்போட்டி: 161-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. E. மனோகரம் கிரேஸ் | - தூத்துக்குடி |
| 2. D. டேவிட் | - சென்னை |
| 3. A. ரெபேக்காள் | - மதுரை |
| 4. R. கிப்ட்ராஜாமணி | - தூத்துக்குடி |
| 5. R. எமிமாய் ரவிக்குமார் | - தூத்துக்குடி |
| 6. R. கஸ்தூரி | - தூத்துக்குடி |
| 7. M. ராமச்சந்திரன் | - தூத்துக்குடி |
| 8. Ira. எதிராசன் | - சங்கரி |
| 9. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 10. V. வீரராகவன் | - கரூர் |
| 11. G.P. ஏசையன் ராஜ் | - கோபி |
| 12. Tmt. சரோஜினி முத்து | - திருப்பூர் |
| 13. Mrs. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 14. R. ஸ்டெல்லா இளமதி | - தாராபுரம் |
| 15. R. ஜோஸ்வா செல்வக்குமார் | - சிவகாசி |
| 16. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 17. Mrs. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 18. Mrs. கிரேஸ் ஸ்டெல்லாபக்தர் | - சென்னை |
| 19. T. ராஜாத்தி | - கோம்பை |
| 20. G. அந்தோனிதாஸ் | - பரமக்குடி |
| 21. K. மோகன் | - நமக்கல் |



# ஆச்சரியம்

## Astonishment

-N.K.Samuel



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்களை வாழ்த்துவதிலே மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய கண்கள் அநேக சமயங்களில் சில வித்தியாசப்பட்ட காட்சிகளை பார்க்கிறது. நம்முடைய செவிகள் கேட்கிறது. எதிர்பாராத சூழ்நிலையில் நடக்கும் சம்பவத்திற்கு பெயர்தான் ஆச்சரியம்,வியப்பு அல்லதுபிரமிப்பு. தூயவேதாகமம் கூட ஒரு ஆச்சரியமான புத்தகம்தான். இதில் பல காலக்கட்டங்களில், அநேக நூற்றாண்டுகளுக்கு இடைவெளியில்; பல கலாச்சாரங்களில் வாழ்ந்த மனிதர்களால் ஒரே ஒரு கருத்தை மிகச்சிறப்பாக சங்கிலித் தொடர்போல் இடைவெளி இல்லாமல் மனுகுலத்தின் மறுவாழ்வைப் பற்றிய தேவனுடைய திட்டத்தையும், அதனிமித்தம் கிறிஸ்துவின் நிகழ்வுகளையும்,இனிவரும் கடைசிநாளில் நடைபெறவிருக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றியும் எழுதப்பட்டு இருக்கிறது என்றால் மற்ற புத்தகங்களுக்கு இல்லாத தனி சிறப்பு இதற்கு உண்டு என்பது ஆச்சரியம் அல்லவா!

ஒருசமயம் புத்தக கண்காட்சி பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் பல புத்தகங்கள் குறுக்கும் நெடுக்குமாக உயரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. உயரமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த இடத்தில் வேதாகமமும் மேலே இருந்தது. அதை கவனித்த ஒருவர் மேலிருந்த வேதாகமத்தை மற்ற புத்தகங்களுக்கு நடுவில் வைத்துவிட்டார். அதைப் பார்த்த ஒரு தேவ ஊழியர் வேதாகமம் எல்லா புத்தகங்களுக்கும் மையமாக உள்ளது என்றார். அதை பார்த்த அந்த நபர் மீண்டுமாக வேதாகமத்தை எடுத்து எல்லா புத்தகங்களுக்கும் அடியில் வைத்துவிட்டார். இதைப் பார்த்த ஊழியர் வேதாகமம் எல்லா புத்தகங்களுக்கும் அடித்தளமாக உள்ளது என்றார். இதை வாசிக்கும் அன்பரே, இது எத்தனை உண்மை. இப்படிப்பட்டதான தூய வேதாகமத்திலிருந்து சில ஆச்சரியப்படவைக்கும் விசுவாசங்களை ஆராய்வோம்.

### மனிதனைக் குறித்து மனிதனின் ஆச்சரியம்

அப்போஸ்தலர்கள் போதித்ததினால் ஏற்பட்ட ஆச்சரியம் என்னவென்றால், பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தைக் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்கள் என்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்த படியினால் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்(அப்.4:13). தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பானியாய் பிறந்த ஒரு மனுஷன் சுகம் அடைந்ததினால் அவனைக்குறித்து ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள் (அப்.3:10). பேதுருவின் பிரசங்கத்தை கேட்ட புறஜாதியார்மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பேதுருவோடு கூட வந்த யூதர்கள் இதைக் கண்டு பிரமித்தார்கள் (அப்.10:44-46).

## கிறிஸ்துவைக்குறித்து மனிதர்களின் ஆச்சரியம்

இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (மத்.7:28,29; 13:54). இயேசுவின் வார்த்தைக்கு, காற்றும்,கடலும் கீழ்ப்படிந்ததைக் கவனித்த சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மத்.8:27). இயேசுவினால் சரீர சுகம் அடைவதைக்கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் (மத்.15:29-31).

இயேசு ஆச்சரியப்படுதல் (மத்.8:5-13)

மனிதன் கடவுளின் படைப்பைக் குறித்து ஆச்சரியப்படலாம் அல்லது ஏதோ ஒரு வகையில் ஆச்சரியப்படலாம்.மேலும் இயேசுவின் போதனையையும் அற்புதங்களையும் கேள்விப்பட்டு ஆச்சரியப்படலாம். ஆனால் .... இங்கு இயேசு மனிதனைக் குறித்து ஆச்சரியப்பட்டார் என்றால் அது பெரிய ஆச்சரியம்தான். மாறுபாடுள்ள சந்ததியே, அற்பவிசுவாசியே, மந்த இருதயமுள்ளவர்களே என்று கோபப்பட்ட கண்கள், ஆச்சரியக் கண்ணோட்டத்தோடே திரும்பிப் பார்க்கிறது இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று...யார் இந்த இஸ்ரவேலர்கள் எதில் இவர்கள் உயர்ந்தவர்கள் இவர்களை ஏன் ஆண்டவர் உதாரணப்படுத்தவேண்டும்?

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமின் வம்சவழியில் வந்தவர்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள். அண்ட சராசரங்களை படைத்த ஜீவனுள்ள தேவனுக்கு சொந்த ஜனங்கள் வாக்குத்தத்தங்களுக்கு சொந்தக்காரர்கள், தேவனுடைய ஆசீர்வாதங்களை அளவில்லாமல் அனுபவித்தவர்கள். நாம் சிந்திக்க போகிற இந்த மனிதனோ இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன். சொந்தம் பாராட்ட உரிமையில்லை. நியாயப்பிரமாணம் இவனுக்கு எதிரிடையாக உள்ளது. இஸ்ரவேலின் காணியாட்சிக்கு புறம்பானவன். அதினாலோ என்னவோ, எனக்கு எல்லாம் இருந்தும் நான் பாத்திரனல்ல என்று தன்னை விளக்கிக் கொண்டு ஒரு வார்த்தை சொல்லும் என்றானோ? அவனுடைய பேச்சும் அணுகுமுறையும் ஆண்டவரை நெகிழவைத்தது, ஆச்சரியப்பட வைத்ததோ? ஒருவார்த்தை சொல்லும் அது போதும் அதினால் என் வேலைக்காரன் சுகமாவான் என்று விசுவாசத்தோடே கேட்டான்.




**கர்த்தருடைய ஊழியர்களோடு இணைந்து ஊழியப் பயிற்சி பெற**
**தொடர்பு கொள்ளவும்: 94435 58041**

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் - இயேசு (யோவான் 12:26)







பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?
# Can Man Find the Way to God? *-Betty*




### பாடம் -1
### தேவன் ஒருவர் இருக்கிறாரா?
## Is There a God?

பூதக்கண்ணாடியின் உதவியினால் மாத்திரம் பார்க்கக்கூடிய அவ்வளவு சிறியவற்றைப் பார்க்கும் கண்களை நாம் பெற்றிருந்தோமானால்...If we had microscophic eyes...

**- சென்ற இதழின் தொடர்ச்சி**

உங்களுடைய கண்கள் சிறந்தவைகளாக, பூக்களின் செல்களை உள்நோக்குபவையாக அவைகளின் வேலைப்பாடுகளின் எண்ணற்ற முழுமையை உற்றுநோக்குவையாக, தோற்றத்தை மாற்றும் சூரிய ஒளியினையும் மண் மற்றும் நீரிலிருந்து சத்துக்களை எடுத்து பூக்களினூடே பயனுள்ள சாரத்தை செலுத்தி, முழுத் தாவரத்திற்குள்ளும் சத்துக்களை அனுப்பி, தொடர்ச்சியான வளர்ச்சிக்காக புதிய செல்களை உருவாக்குகிற கார்பன்டை ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை வெளியிடுவதைப் பார்க்கக் கூடிய கண்களையுடையவர்களாய் இருந்தால்! ஆ! இந்த மனிதக் கண்கள் சிறப்பானவற்றை மட்டுமே பார்க்கக்கூடும், நாம் ஆச்சரியமிக்க பூதக்கண்ணாடியினால் பார்க்கக்கூடிய கண்களால் செல்-உலகங்கள் உயிர் வாழ்வன அனைத்தையும் உருவாக்குகிறது என கண்டுகொள்ளமுடியும்!

ஆனால், அநேக உயிர்வாழ்வனவற்றை நாம் காணமுடியாது, நம்முடைய சரீர பிரகாரமான உலகத்தில் கூட பார்க்க முடியாது. இப்படிப்பட்ட நுண்ணிய உயிரினங்களை கொஞ்சங்குறைய நிசத்தை உருவாக்கும் இந்தக்கண்களால் பார்க்கமுடியாது உண்மையாயிருக்கிறதா? இல்லை, நிச்சயமாக இல்லை!

இப்போது, மிகப்பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டு, நம் பாதையில் கிடந்த உடைந்துபோன தட்டு, அல்லது உயிருள்ள பூக்கள் அதன் உருவமைப்பில் காணப்படும் நுண்ணறிவு முழுவதுமே உண்மையானதாக இருக்கின்றதா? கொடுக்கப்பட்டுள்ள, ஒரு பூ உருவாக்கப்படுகின்றதை நாம் ஒருபோதும் கண்டிருக்கவில்லை (ஆனால் அந்த தட்டிற்கு ஒரு படைப்பாளி இருந்தார் என்பதை நாம் சந்தேகிப்பதில்லை, இருந்தபோதிலும் நாம் அந்தப் படைப்பாளியை ஒருபோதும் பார்க்கவில்லை) இந்தப் பூக்களின் படைப்பில் கரங்களும் மனதும் இணைந்து ஒரு உருவத்தை படைத்துள்ளது என்றாலும் இந்த சரீரப்பிரகாரமான மனிதக் கண்கள் சாதாரணமாக அதைப் பார்க்கவில்லை. ஆனால் அண்டசராசரங்களில் இருக்கின்ற